## அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
## தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2006

# அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்

**Tamil Competition - Australian Society of Graduate Tamils**

எழுத்தறிவுப் போட்டி

அதிமேற்பிரிவு
(13-18 வயதுப் பிரிவு)

காலம்: பி.ப. 2.30 மணி,
சனிக்கிழமை, **12/08/2006**

நேரம்: 1.30மணி

(பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிக 10 நிமிடங்கள் வழங்கப்படும்)

அடையாள இலக்கம்: ☐ ☐ ☐ ☐ ☐ ☐

## அ) கீழே உள்ள சொற்களைப் பிரித்து எழுதுக.

புள்ளிகள் = 10x1 = 10

1) ஆற்றோரம் = ......................
2) நீரூற்று = ......................
3) தன்னம்பிக்கை = ......................
4) ஆட்டுமந்தை = ......................
5) தற்புகழ்ச்சி = ......................
6) ஒருவருக்கொருவர் = ......................
7) நாட்டியக்கலை = ......................
8) தன்னலம் = ......................
9) கனவுலகம் = ......................
10) விழிப்புணர்ச்சி = ......................

புள்ளிகள்:....................

## ஆ) கீழே உள்ள சொற்களைச் சேர்த்து எழுதுக.

புள்ளிகள் = 10x1 = 10

1) உலகம் + புகழ் = ......................
2) ஆறு + அறிவு = ......................
3) நிலவு + ஒளி = ......................
4) பொன் + பதக்கம் = ......................
5) தீ + பந்தம் = ......................
6) மண் + உலகம் = ......................
7) மேடு + நிலம் = ......................
8) தீ + அணைப்பு = ......................
9) கூடு + புழு = ......................
10) ஐந்து + புலன் = ......................

புள்ளிகள்:....................

**இ) கீழே கோடிடப்பட்ட சொற்களுக்கு மிகப் பொருத்தமான <u>ஒத்தகருத்துள்ள</u> சொற்களை அடையாளங்கண்டு கோடிட்ட இடத்தில் எழுதுக.**

புள்ளிகள் = 10x1.5 = 15

1) சொற்போரின் இறுதியில் பேச்சாளர் தம் கருத்தை <u>வலியுறுத்திக்</u> கூறித் தம் குழுவினருக்கு வெற்றியைத் தேடித் தந்தார்.

1) எடுப்பாக 2) முடிவாக
3) பணிவாக 4) ஆணித்தரமாக

……………………….

2) ஆதித்தன் வாழ்க்கையில் அறநெறிகளை கடைப்பிடித்து <u>ஒழுகியதால்</u> அவனைப் பலரும் பாராட்டினர்.

1) ஆராய்ந்ததால் 2) மகிழ்ந்ததால்
3) வாழ்ந்ததால் 4) சிந்தித்தால்

……………………….

3) மக்கள் குளிர் காலத்தில் அணிவதற்கு கம்பளி ஆடையே <u>உகந்தது</u>.

1) அழகானது 2) சூடானது
3) ஏற்றது 4) உயர்ந்தது

……………………….

4) பொன்னைத் தவிர மற்றைய உலோகங்கள் யாவும் நாளடைவில் நிறம் <u>குன்றிவிடும்</u>.

1) மங்கிவிடும் 2) மறைந்துவிடும்
2) தேய்ந்துவிடும் 3) கறுத்துவிடும்

……………………….

5) வரவு அறிந்து செலவு செய்யாதார் வாழ்க்கையில் <u>இடர்படுவர்</u>.

1) கடன்படுவர் 2) அவமானப்படுவர்
3) துன்பப்படுவர் 4) பயப்படுவார்

……………………….

6) முதலாளி தன் தொழிலாளியின் நடத்தை மீது <u>ஐயுற்று</u> அவனிடம் பல கேள்விகள் கேட்டார்.

   1) சினமுற்று 2) சந்தேகமுற்று
   3) வெறுப்புற்று 4) பசியுற்று

……………………….

7) `போப்' பாதிரியார் தன்னலம் பாராது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு <u>அயராது</u> உழைத்தார்.

   1) அஞ்சாது 2) தயங்காது
   3) குன்றாது 4) ஓயாது

……………………….

8) இராணுவத்தினர் மக்கள் மீது <u>கண்மூடித்தனமாகத்</u> தாக்குதல் தொடுத்தனர்.

   1) கண்களை மூடியபடி 2) கண்டபடி
   3) கவலைப் படும்படி 4) கண்கள் தெரியாதபடி

……………………….

9) ஆழிப்பேரலையின் (சுனாமி) <u>அனர்த்தங்களால்</u> தமது உடமைகளை இழந்தவர்களுக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் உதவியளித்தது.

   1) அநாகரிகத்தால் 2) அரவணைப்பினால
   3) அழிவினால் 4) ஆவேசத்தினால்

……………………….

10) தாய்நாடு விட்டு இந்நாட்டிற்கு வந்த அபிராமிக்குத் தாய்நாட்டின் <u>நினைவுகள்</u> என்றும் பசுமையானவையே.

   1) நிம்மதிகள் 2) எண்ணங்கள்
   3) கனவுகள் 4) விம்பங்கள்

……………………….

புள்ளிகள்:………………..

**ஈ) கீழே கோடிடப்பட்ட சொற்களுக்கு <u>எதிர்க்கருத்துள்ள</u> சொற்களை அடையாளங்கண்டு கோடிட்ட இடத்தில் எழுதுக.**

புள்ளிகள் = 10x1.5 = 15

1) என் தந்தையார் வாங்கிக் கொடுத்த கைப்பை மிகவும் <u>மிருதுவான</u> தோலினால் ஆனது.
   1) அழகான  3) வழவழப்பான
   3) வன்மையான  4) மலிவான

…………………………

2) நாளுக்கு நாள் என் தோழிக்கு இசைத்துறையில் இருக்கின்ற ஆர்வம் <u>குறைந்து</u> வருகின்றது.
   1) நிறைந்து  2) மிகுந்து
   3) மறைந்து  4) தளர்ந்து

…………………………

3) தேசிய அரும்பொருளகத்தில் நடைபெற்ற கண்காட்சியில் பல <u>தொன்மையான</u> பொருட்கள் வைக்கப்பட்டு இருந்தன.
   1) அருமையான  2) அபூர்வமான
   3) எளிமையான  4) புதுமையான

…………………………

4) கடிதத்தைப் படித்துப் பார்த்த அமுதாவின் முகம் <u>மலர்ந்தது</u>.
   1) சினந்தது  2) குவிந்தது
   3) வாடியது  4) சுருங்கியது

…………………………

5) நேற்றுப் பிற்பகல் பாராளுமன்றம் <u>கூடியது</u>.
   1) தொடங்கியது  2) பிரிந்தது
   3) முடிந்தது  4) கலைந்தது

…………………………

6) வெப்பத்தால் சில பொருட்கள் இளகிவிடும்.
   1) இறுகிவிடும்   2) உருகிவிடும்
   3) சுருங்கிவிடும்   4) கரைந்துவிடும்

……………………….

7) இங்கு இலங்கை, இந்திய உணவுப் பண்டங்களை விற்கும் கடைகள் பெருகிவிட்டன.
   1) நலிந்துவிட்டன   2) கூடிவிட்டன
   3) குறைந்துவிட்டன   4) மலிந்துவிட்டன

……………………….

8) விவாதப் போட்டியில் என் கட்சியினர் தலைப்பை எதிர்த்துப் பேசினர்.
   1) இழித்துப்   2) வெறுத்துப்
   3) ஆதரித்துப்   4) புறக்கணித்துப்

……………………….

9) பல அறிவியல் கண்டுபிடிப்புக்கள் ஆக்கத்திற்கு மட்டுமே பயன்படுகின்றன.
   1) அழிவிற்கு   2) பெருக்கத்திற்கு
   3) உற்பத்திக்கு   4) சண்டைக்கு

……………………….

10) இலங்கையின் தற்கால நாட்டுநடப்புக்கள் தமிழரின் நல்ல எதிர்காலத்திற்கு சாதகமாக இல்லை என்பது பொதுவான அபிப்பிராயம்.
   1) ஆதரவாக   2) எதிராக
   3) புதிராக   4) சாத்தியமாக

……………………….

புள்ளிகள்:………………..

**உ) பின்வரும் ஒவ்வொரு சொல்லையும் கொண்டு அதன் பொருள் விளங்கக்கூடியதாக சரியான வசனம் அமைத்து எழுதுக.**

புள்ளிகள் = 10x2 = 20

1) அலகு: …………………………………………………

……………………………………………………………

2) அழகு: …………………………………………………

……………………………………………………………

3) ஆனி: …………………………………………………

……………………………………………………………

4) ஆணி: …………………………………………………

……………………………………………………………

5) விலை: …………………………………………………

……………………………………………………………

6) விளை: …………………………………………………

……………………………………………………………

7) வெல்லம்: ………………………………………………

……………………………………………………………

8) வெள்ளம்: ………………………………………………

……………………………………………………………

9) வேலை: …………………………………………………

……………………………………………………………

10) வேளை: …………………………………………………

……………………………………………………………

புள்ளிகள்:………………..

**ஊ) கீழே கொடுக்கப்பட்ட கட்டுரையை வாசித்துப் பின்வரும் கேள்விகளுக்குப் பதில்கள் எழுதுக.**

``தமிழன் என்றோர் இனம் உண்டு,
தனியே அதற்கொரு குணம் உண்டு.''
என்று சொன்னான் புரட்சிக் கவிஞன்.

பல ஆயிரம் ஆண்டுகளாகத் தனக்குரிய தனி அடையாளத்தைப் பேணி வந்த தமிழ் இனம் இன்று அரசியற் சதந்திரத்தை இழந்து, அகதிகள் ஆகி, உலகின் பல நாடுகளிலும் சிதறிக் கிடக்கின்றது. தமிழர்கள் தமது சுய அடையாளத்தை அறிந்து கொள்ளாமற் தத்தளிக்கும் சூழல் தலை தூக்கி உள்ளது. எமது தமிழ் மண் இன்று மாண்பும், செல்வமும் இழந்து, மிக்க ஈனம் எய்தி நிற்கிறது. உலகிலேயே உயர் தனிச் செம் மொழியாக அங்கீகரிக்கப்பட்டு, அதேநேரம் வாழும் மொழியாக விளங்கும் மிகச்சில மொழிகளுள் ஒன்றான தமிழ் கோலோச்சுவதற்கு இன்று ஒரு நாடு இல்லை. வெறும் வாய்ச் சொல்லில் வீரராக வாழுவதை விட்டு, தமிழ் மண்ணின் பொற்காலத்தைப் பற்றி நன்றாகப் புரிந்து கொண்டு, எமது தமிழ் மண்ணின் தாகம் தீர்க்கச் செயலாற்ற வேண்டும்.

ஆதி காலத்தில் இருந்து நமது தமிழ் மண் அடைந்திருந்த சிறப்புக்களைச் சற்றே எண்ணிப் பார்ப்போமா? உலகில் மிக அதிகமான மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்ட சமயம் சாராத நூல் திருக்குறள். இதை உலகிற்குத் தந்து வான் புகழ் கொண்டது நம் தமிழ் மண். பிரித்தானியர்களுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, முதன் முதலாக உலகில் கடற்படையின் துணையுடன் கடல்கடந்த சாம்ராச்சியம் ஒன்றை நிறுவியவர்கள் தமிழர்கள். தஞ்சைப் பெருங்கோயில், மாமல்லபுரம், கங்கை கொண்ட சோழபுரம் முதலிய இடங்களில் உள்ள சிற்ப, சித்திரங்கள் இன்றும் உலகின் கலைப் பொக்கிஷங்கள்.

இலக்கியங்களை எடுத்துக் கொண்டால், மனித வாழ்வின் ஒவ்வொரு முகத்தையும் எடுத்துக் காட்டும் அருமையான சங்கப்பாடல்களை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தந்தது தமிழ் மண் என்று மொழியியற் பேராசிரியர் ஹரிஸ் அவர்கள் விதந்துரைக்கிறார். ‘அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி’ என்பது போல, இலக்கியங்களில் வரும் வரிகள், அணுவைத் துளைக்கும் திறமை சங்கத் தமிழருக்கு இருந்ததைக் குறிக்கா விட்டாலும், இவற்றையெல்லாம் பற்றி அக்காலத்தியேயே அவர்கள் சிந்தித்ததே வியக்க வைக்கிறது. இவ்வாறாக, செயற்கரிய செயல்கள் புரிந்த பெரியவர்கள் பலர் தோன்றிய தமிழ் மண்ணிலே சாதனையே உயிர் மூச்சானது. மேன்மேலும் முன்னேறி விந்தைகள் புரிவதே தாகம் ஆக ஆயிற்று.

கால வெள்ளத்தோடு தமிழ் மண்ணுக்குச் சோதனைகளும் சூழ்ந்தன. இந்தியாவிலும் இலங்கையிலும் பரவியிருந்த தமிழர் தாயகம் முதலில் முகமதியர் படையெடுப்புக்களை சந்தித்தது. பின்பு ஐரோப்பியர் ஆட்சியையும் சந்தித்தது. சேர, சோழ, பாண்டிய, பல்லவர்கள் என்றும், ஈழத்து ஆரியச் சக்கரவர்த்திகள் என்றும், வன்னியர்கள், வேளிர்கள், சேதுபதிகள், நாயக்கர்கள் மற்றும் சிற்றரசர்கள் என்றும் பற்பல மன்னர்களால் காலத்துக்கு காலம் பிரித்தாளப்பட்ட தமிழ் மண்ணை அன்னியர்கள் இலகுவில் வென்று வீழ்த்தினர்.

பல நூற்றாண்டு காலம் அடங்கிக்கிடந்ததன் பயனாகத் தமிழும் தமிழ்ப் பண்பாடும் இழிவானவை: நம்மை ஆள்பவர்களின் கலாச்சாரமும் வாழ்க்கை நெறியுமே உயர்ந்தவை என்று கருதும் அடிமை மனப்பான்மை தமிழரிடம் நிலவுவதாயிற்று. இம்மனப்பான்மை வேரூன்றி வளர்ந்தபோது நமது தனித்துவத்தையும் அடையாளத்தையும் இழந்தோம். மற்றையவர்களைப் பின்பற்றும் இரண்டாந்தர இனம் என்ற நிலைக்குத் தள்ளப் பட்டோம். சோதனைகளைத் தாண்டி சாதனைகள் புரியத்தூண்டும் எமது மண்ணின் தாகத்தைத் தீர்க்க மறந்தோம்.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியிலே கீழைத்தேய நாடுகளைவிட்டு மேலைநாட்டார் அகன்ற போதிலும், தமிழர் தாயகமானது தனி ஒரு அரசியல் அலகாகத் திகழும் பாக்கியம் கிடைக்கவில்லை. வலிமையான அரசியற் தலைமைத்துவம் இல்லாததன் காரணமாகத் தனி அடையாளத்தை உருவாக்கும் முயற்சிகளும் வேகம் பெறவில்லை. தமிழ்-தமிழருக்குரிய தனி அடையாளத்தை மீள உருவாக்க வேண்டிய தேவை நமக்கு உள்ளது. `அகிலம்' எங்கும் ஓடியே அகதியான தமிழர் ஆகிய நாம், நம்முடைய அடையாளத்தை அறுதியிட்டுக் கொள்ள விரைந்து முயற்சிகளைச் செய்யாவிட்டால், விரைவில் அதை அறவே இழந்து விடும் அபாயத்தில் இருக்கின்றோம்.

தமிழ் மொழியினதும், மண்ணினதும் மறு மலர்ச்சிக்காக உழைப்பது ஒவ்வொரு தமிழரதும் கடமை. விஞ்ஞானத்திலும், கணிதத்திலும், பொருளியலிலும், கலைத்துறையிலும் மற்றுமுள்ள துறைகள் யாவற்றிலும் தமிழும் தமிழரும் மறுமலர்ச்சி அடையப் பாடுபட்டு உழைத்தல் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இவை எல்லாவற்றையும் கொண்டு நடத்த நாம் அரசியற் சதந்திரம் பெற வேண்டும். செந்தமிழர் வாழ்வதற்கு ஓர் நாடு, நாளை உதயத்தில் தோன்ற வேண்டும். அப்போது தான் தமிழ் மண்ணின் தாகம் தணியும். தமிழர்தம் பொற்காலம் மறுபடியும் மலரும்.

**பின்வரும் கேள்விகளுக்கு மேலுள்ள கட்டுரையிலிருந்து விடை எழுதுக.**

புள்ளிகள் = 10x3 = 30

1) இந்தக் கட்டுரையில் ஆசிரியர் கூறும் தமிழ் அடைந்திருந்த சிறப்புக்கள் மூன்றைத் தருக?

………………………………………………………………………

………………………………………………………………………

………………………………………………………………………

2) திருக்குறளில் இருக்கும் மூன்று பால்கள் (பிரிவுகள்) எவை?

………………………………………………………………………

………………………………………………………………………

3) சோழப் பேரரசர் இருவரின் பெயர்கள் தருக?

………………………………………………………………………
………………………………………………………………………

4) உலகில் உள்ள உயர் தனிச் செம்மொழிகளுள் (classical language) தமிழுக்குள்ள சிறப்பியல்பு என்ன?
………………………………………………………………………
………………………………………………………………………
………………………………………………………………………

5) தமிழர் தாயகத்தின் மீது முதலில் படை எடுத்தவர்கள் யார்?
………………………………………………………………………

6) தமிழரின் பலவீனம் என்று ஆசிரியர் கூறும் ஒன்றினைத் தருக?
………………………………………………………………………
………………………………………………………………………

7) “மூவேந்தர்கள்” என்று கூறப்படும் மூன்று அரசர் குலங்களைத் தருக?
………………………………………………………………………
………………………………………………………………………

8) இலங்கைத் தமிழ் மன்னர் குலம் ஒன்றின் பெயர் தருக?
………………………………………………………………………

9) அடிமை மனப்பாண்மை தமிழரிடம் வேரூன்றுவதற்கு ஆசிரியர் கூறும் காரணம் என்ன?
………………………………………………………………………
………………………………………………………………………
………………………………………………………………………

10) இந்தக் கட்டுரைக்கு மிகப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக?
………………………………………………………………………

புள்ளிகள்: ……………………..

---

மொத்தப் புள்ளிகள்:………………..